அதிகாரிகள் விவரங்களைச் சேகரித்திருக்கிறார்கள். மீண்டும் தொடர்ந்து மைசூர் மாநிலத்தோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : ஒகேனக்கல் திட்டம் சம்பந்தமாக சர்வே செய்யப்பட்டு, எவ்வளவு மதிப்பீடு என்பதெல்லாம் திரு. பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபோதே செய்யப்பட்டதே, அப்போது போடப்பட்ட திட்டத்தின் மதிப்பீடு என்ன? அதில் எவ்வளவு ஏரியா அடங்கும், பாசனத்திற்குப் பயன்படுமா? நம் அரசாங்கம் எந்த வகையில் அதை அமைக்க இருக்கிறது என்பதை எல்லாம் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னிடத்திலுள்ள புள்ளி விவரங்களின்படி இது சம்பந்தப்பட்ட பல்வேறு ஏற்பாடுகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்தே இறுதி வடிவம் கொடுப்பது பற்றி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதாகும். மற்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

THIRU B. VENKATASWAMY : We are in large deficit of electricity. May I know from the Hon. Minister whether there is any proposal to expedite the Hogenakkal programme and see that it is implemented early ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கருநாடக மாநில அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தியே முடிவு செய்ய வேண்டும்.

திரு. அ. ஆறுமுகம் : காவேரி ஆற்றில் மேட்டூருக்கும், பவானிக்கும் இடையில் நீர் மின்விசைத் திட்டம் அமைக்க ஆராய்ச்சி செய்யப்பட்டது. அதற்காக 40 ஏக்கரா கூட நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது, எப்போது முடியும் என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

Upper Thambaraparani Electricity Scheme.

* 100 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(a) whether Upper Thambaraparani Hydro Electricity Scheme has been included in the 5th Five Year Plan; and

(b) if so, the details of the same?

1975 அக்டோபர் 28]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) மேல் தாம்பிரபரணித் திட்டம் என்னும் திட்டத்தில் ஆறு மின் விசை உற்பத்தி நிலையங்களை நிறுவும் பணியை மேற்கொள்ளக் கருதப் பட்டுள்ளது. அந்த ஆறு மின் விசை உற்பத்தி நிலையங்களில், ஐந்தாவது மின்விசை உற்பத்தி நிலையமான சேர்வலாறு நிலையத் திற்கு மத்தியத் திட்ட ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத் திட்டப் பணிகளுடன் ஒன்றாக அதனை நிறைவேற்ற அப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) 20 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் அமைக்கப்பட விருக்கும் சேர்வலாறு மின் விசை உற்பத்தி நிலையத்துக்கு ரூ. 681.02 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் ஆருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அதாவது 1979-80-ல் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. என். கே. பழனிசாமி: சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய திட்டம்—மின்சார அமைச்சர் கொடுத்துள்ள பட்ஜெட்டில் சேர்க்கப்படவில்லையே? இதற்கு என்ன காரணம்? இதற்கு பளானிங் கமிஷன் ஒப்புதல் அளித்திருக்கிறதா? சர்க்கார் சமீபத்தில் ரூ. 75 லட்சம் இதற்காக ஒதுக்கியிருப்பதாகச் சொல்லி யிருப்பது, ஏன் மின்சார பட்ஜெட்டில் சேர்க்கப்படவில்லை?

மாண்மிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் திட்டத் திற்கு ப்ளானிங் கமிஷன் ஒப்புதல் அளித்திருக்கிறது. அவர்களது அனுமதி பெற்ற பிறகே வேலை துவங்கியிருக்கிறது. இதன் மதிப்பு ஆறேமுக்கால் கோடி ரூபாய்.

திரு. ஆ. பரந்தாமன்: நமது அரசு கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக ஒரு பத்து மின்சாரத் திட்டங்களுக்கு ஒப்புதல் தரவேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தி வந்ததே, அதில் எத்தனை திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் தந்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ச. சங்குமுத்து தேவர் : இம்மாதிரி மின் திட்டங்களுக்காக நீர்த்தேக்கங்களை கட்டப்படுகிறபோது, அதனால் ஏற்கனவே பாசனம் பெற்று வந்த ஆயக்கட்டுகளுக்குப் பாதகம் இல்லாமல் இருக்குமா என்பதை விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே பாசனத்திற்கு உறுதி செய்யப்பட்டிருக்குமானால் பாசனத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

Raising of apple trees.

*101 Q.—Thiru V. M. ABDUL JABBAR : Will the Hon the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether the Government have investigated the possibilities of growing apple trees in and around Nilgiris and Kodaikanal hill areas; and

(*b*) if so, the results thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

Thirumathi T. N. ANANDANAYAKI : Sir, from the answer placed on the table, I am able to find that certain varieties are grown in Kodaikanal and the Nilgiris. May I know whether the Government will take steps to popularise one or two varieties which are mentioned in the written answer?

Mr. DEPUTY SPEAKER : Name the varieties, please.

Thirumathi T. N. ANANDANAYAKI : I do not remember them.

The Hon. Thiru Si. Pa. ADITANAR : These are not grown there in large quantities. The matter is still in the experimental

---

@ 146-149 -ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.